# சமகாலப் போலிச்செய்திகளின் போக்கு: இலங்கையில் அடையாளங் காணப்பட்டவை மீதான ஓர் ஆய்வு



**வி. விமலாதித்தன்**

*தற்காலிக விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை*

**ஆய்வுச்சுருக்கம்:**

போலிச்செய்திகள் என்பவை செய்தி என முன்னிறுத்தப்படும் பொய்யான அல்லது தவறாக வழிநடத்தக்கூடிய தகவல்கள் ஆகும். தற்காலத்தில் தவறானதகவல் *(Mis-information)*, திரிபுபடுத்தப்பட்ட தகவல் *(Dis-information)*, தீங்கானதகவல் *(Mal-information)* எனும் மூன்று பிரதான பிரிவுகள் போலிச்செய்திகளில் உள்ளடங்குகின்றன. ஊடகத்துறையின் செல்நெறியில் தவறான தகவல்களும் திரிபுபடுத்தப்பட்ட தகவல்களும் எப்பொழுதும் இருந்து கொண்டேயிருந்த போதும், கடந்த சில ஆண்டுகளிலேயே அவை பல்கிப்பெருகியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

தற்காலத்தில் ஊடகங்கள் எண்ணிக்கையில் அதிகரித்துக் காணப்படும் நிலையில், அவற்றிலிருந்து பரவுகின்ற போலிச்செய்திகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளமை ஒரு பாரிய பிரச்சினையாக நோக்கப்படுகின்றது. இவற்றின் காரணமாக சமூகத்தில் ஏற்படும் தாக்கத்தினால் பொதுமக்கள் பாதிப்புறுவதுடன் சமூக அமைதி, இனங்களுக்கு இடையேயான நல்லுறவு போன்றனவும் கெடுகின்றன. இந்நிலையில் பிராந்திய ரீதியில் அடையாளம் காணப்பட்ட சமகால போலிச்செய்திகளின் இயல்பு, போக்கு, நோக்கம் முதலானவை ஆய்வுக்கு உள்ளாக்கப்படவேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது.

சமூகவலைத் தளங்களில் பரப்பப்படுவனவும் இலங்கை சார்ந்தனவுமான சமகாலப் போலிச் செய்திகளை அடையாளம் காணும் பணிகள் பல்வேறு தரப்பினராலும் முன்னெடுக்கப்படுகின்றன. *"Fact Seeker"* எனும் பெயரிலான செயற்றிட்ட மூடாக இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தினால், *01.02.2021* ஆம் திகதியிலிருந்து *13.10.2021* ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட *151* செய்திகளை பிரதான ஆதாரமாகக் கொண்டு சமூக வலைத்தளங்களில் பரவுகின்ற சமகாலப் போலிச்செய்திகளை ஆராய்வதை இக்கற்கை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. தரவுகளைத் திரட்டியும் பகுத்தும் நோக்குவதற்கு பகுப்பாய்வு முறையியலும் விபரிப்புச் செயற்பாட்டிற்கு விபரண ஆய்வு முறையியலும் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கை

*(*இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் (Swami Vipulananda Institute of Aesthetic Studies) கடந்த ஆண்டு ஒழுங்கு செய்த ஆய்வரங்கில் இது சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், இதுவரை அச்சிலோ, மின்னூல் வடிவிலோ இது வெளியிடப்படவில்லை. இப்போது திராவிடப் பொழிலில் முதன் முறையாக அச்சில் வருகிறது.)*

சார்ந்த சமகாலப் போலிச்செய்திகளது இயல்புகள், விடயப்பரப்புகள், பின்னணி, போக்கு ஆகியவை எவை என்ற ஆய்வுப் பிரச்சினையை முன்வைத்து, இதுதொடர்பில் ஏற்பட்டுள்ள ஆய்விடைவெளியை நிரப்பும் நோக்குடன் இக்கற்கை முன்னெடுக்கப்படுகின்றது.[1]

**திறவுச்சொற்கள்:**

போலிச்செய்தி, திரிபுபடுத்தப்பட்ட தகவல், சமூகவலைத்தளம், பொய்த்தரவு, கொரோனா

**I. அறிமுகம்:**

போலிச்செய்திகள் என்பவை செய்தி என முன்னிறுத்தப்படும் பொய்யான அல்லது தவறாக வழிநடத்தக்கூடிய தகவல்கள் ஆகும். இவை பெரும்பாலும் ஒரு நபர் அல்லது நிறுவனத்தின் நற்பெயரை சேதப்படுத்தும் அல்லது ஏதேனும் வருவாய் மூலம் பணம் சம்பாதிக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளன. ஊடகத்துறையில் நெடுங்காலமாகத் தொடரும் போலிச்செய்திப் பிரச்சினை, கடந்த தசாப்தத்தில் அதிகரித்த சமூக ஊடகப் பயன்பாடு காரணமாக பாரியளவில் அதிகரித்துள்ளது. போலிச்செய்தி என்பதற்கான வரை விலக்கணம் தொடர்ச்சியான மாற்றத்தைக் கண்டு வருகின்றது. தற்போதைய காலகட்டத்தில் பின்வருவன போலிச்செய்திக்குள் உள்ளடங்குகின்றன:

1. தவறான தகவல் *(Mis-information)*
2. திரிபுபடுத்தப்பட்ட தகவல் *(Dis-information)*
3. தீங்கான தகவல் *(Mal-information)*

தவறான தகவல் *(Mis-information)* என்பது பொய்யான, செம்மையற்ற, தவறாக வழிநடத்தும் தரவை உள்ளடக்கியதாகும். எனினும் இது தீங்கிழைக்கும் எண்ணத்துடன் பரப்பப்படுவதில்லை. திரிபுபடுத்தப்பட்ட தகவல் *(Dis-information)* என்பது தீங்கிழைக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்படுவதுடன் மக்கள் மத்தியில் பரப்பப்படுகின்றது. தீங்கான தகவல் *(Mal-information)* என்பது உண்மையை அடிப்படையாகக் கொண்டதுடன் தீங்கிழைக்கும் நோக்கத்தையும் கொண்டது. தவறான தகவல் *(Mis-information)* என்பது பிறழ்தகவல் என்ற பெயரிலும் திரிபுபடுத்தப்பட்ட தகவல் *(Dis-information)* ஆனது திட்டமிடப்பட்ட பிறழ்தகவல் என்ற பெயரிலும் சில இடங்களில் குறிப்பிடப்படுகின்றன.

தவறான தகவல் *(Mis-information)* மற்றும் திரிபுபடுத்தப்பட்ட தகவல் *(Dis-information)* ஆகியனபின்வரும்தன்மைகளுள்ஒன்றையோ பலவற்றையோ கொண்டிருக்கலாம் *(Mis Dis Information)* இதழியலாளர் கையேடு: ஆசிய ஊடகவியல் கல்லூரி, பக். 10.):

1. அங்கதம் அல்லது பகடி - ஏமாற்றக்கூடிய சாத்தியமுள்ள ஒரு தகவல் ஆனால் தீங்கு விளைவிக்காதது.
2. தவறாகவழி நடத்தக்கூடியவை - ஒரு தகவலைப்பயன்படுத்தி தனிநபரையோ அல்லது ஒரு விஷயத்தையோ தவறாக சித்தரிக்க முயலுதல்
3. மூல ஆதாரங்கள் மாற்றப்பட்டவை - அசலான மூல ஆதாரங்களை மாற்றிப்பயன்படுத்துதல்
4. புனையப்பட்டவை - முற்றிலும் உண்மையற்ற உள்ளடக்கத்தைக் கொண்டது. தீங்கு விளைவிக்கக்கூடியது.
5. பொய்யான தொடர்புடையவை - தலைப்புகளுக்கும், காணொளிகளுக்கும் அடிக்குறிப்புகளுக்கும் தொடர்பில்லாதிருப்பவை.

6. பொய்யான சூழலையுடையவை - ஒரு அசலான உள்ளடக்கதைப் பொய்யான சூழ் நிலையோடு இணைத்து வெளியிடல்.

7. திரிக்கப்பட்டவை - ஒரு அசலான தகவல் திரிக்கப்படுதல், குறிப்பாக ஒரு புகைப்படத்தையோ அல்லது காணொளியையோ திரித்து ஏமாற்றுதல்.

ஊடகத்துறையின் செல்நெறியில் தவறான தகவல்களும் திரிபுபடுத்தப்பட்ட தகவல்களும் எப்பொழுதும் இருந்து கொண்டேயிருந்த போதும், கடந்த சில ஆண்டுகளிலேயே அவை பல்கிப்பெருகியுள்ளமை அவதானிக்கப் பட்டுள்ளது. இணையவெளியில் ஏராளமாகப் பெருகியுள்ள தகவல்களே தகவல்திரிபு ஏற்பட வழிவகுக்கின்றன. இணையவெளியில் உண்மையைச் சரிபார்த்தல் மற்றும் தகவல் ஒப்பீட்டு முறை ஆகியன இல்லாமையே இப்போலிச் செய்திகளுக்கு வழிவகுக்கின்றன. திட்டமிடப் பட்டுப் பரப்பப்படும் போலிச்செய்திகளின் பின்னால் அரசியல், சமூக, பொருளாதார, வணிக நோக்கங்கள் இருக்கக்கூடும். சமூக விரோதப் போக்குடையோரின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள அவை இதழியலாளர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகளும் உள்ளன. அத்துடன், சமூகவலைத் தளங்களில் உள்ள போலிச் செய்திகளை வெகுஜன ஊடகங்கள் எடுத்துக்கொண்டு பொதுவெளியில் பெருக்கிவிடக்கூடிய சாத்தியமும் உள்ளது. பேரிடர்க் காலங்களில் தவறான தகவல்களும் திரிபுபடுத்தப்பட்ட தகவல்களும் மொத்த அரசு மற்றும் சமூக கட்டமைப்புகளையும் வீழ்த்திவிடக்கூடிய சக்திபடைத்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. (Mis Dis Information) இதழியலாளர் கையேடு: ஆசிய ஊடகவியல் கல்லூரி, பக். 28.)

போலிச்செய்திகள் உருவாகுவதற்கான காரணங்களாக பின்வரும் சில அடையாளங் காணப்பட்ட போதும் இவற்றைவிட வேறும்பல காரணங்கள் இருத்தல் கூடும்: (Mis Dis Information) இதழியலாளர் கையேடு: ஆசிய ஊடகவியல் கல்லூரி, பக். 29.)

1. போர்க்காலம் அல்லது பேரிடர் போன்ற நெருக்கடிக் காலங்களில் தகவல் திரிபுக்கான சந்தர்ப்பங்கள் மிகுதியாக உருவாகுதல்.

2. செய்தியானது அதனளவில் இயல்பாக உருவாகாமல் ஓர் ஊடகவியலாளரால் வலிந்து உருவாக்கப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்படல்

3. ஊடகவியலாளர் ஆனவர் புதுச் செய்திகளைக் கண்டுபிடிக்கும் நெருக்கடியோடு இருக்கும் நிலை

4. ஊடகவியலாளர் ஆனவர் தாம் தனித்த பாணியில் ஒரு செய்தியை அணுக முற்படும் கட்டாயத்தில் இயங்கும் நிலை.

5. ஊடகவியலாளர் ஆனவர் தம் செய்திகளுக்கு வரும் பாராட்டையும் பெயரையும் நினைத்து இயங்கும் நிலை.

6. செய்தியை முதலில் சொல்லவேண்டிய போட்டிக் கட்டாயத்தில் ஏற்படும் நேரமின்மையால் செய்தி ஊடகங்கள் தகவலை ஒப்பீடு செய்யாமல் போகும் நிலை

7. செய்தி ஒன்று மிகைப்படுத்தலுக்கு உள்ளாகும் நிலை.

8. புள்ளிவிபரங்களில் தவறுகள் ஏற்படும் நிலை.

9. தரவுகள் இல்லாமற்போகும் போது ஊடகவியலாளர்கள் ஊடகங்களில் ஈடுபடல்

10. செய்திகளில் பயன்படுத்தப்படும் மொழியும் தொனியும் உணர்வுநீதியான விடயப்பரப்புகளில் தொழிற்படும் நிலை.

11. உத்தியோகபூர்வமற்ற உரையாடல்களிலுள்ள விஷயங்களை ஊடகவியல் அறத்திற்கு எதிராக வெளியிடப்படும் நிலை.

12. குற்றச்செய்திகளுக்கான மூலாதாரங்களுக்காக காவல்துறையின் ஆவணங்களில் தங்கியிருத்தலும் மாற்று ஆதாரங்களைத் தேடாதிருத்தலும்.

13. ஊடகவியலாளர் முன்முடிவுடன் இயங்கும் நிலை காணப்படுதல்

14. வெகுஜன செய்தி நிறுவனங்களுக்கு இருப்பதைப் போன்ற விதிகளும் கட்டுப்பாடுகளும் சமூக ஊடகங்களுக்கு இல்லாமை

இணைய வெளியில் பரவுகின்ற போலிச்செய்திகள் பெரும்பாலும் பிராந்தியம் சார் விடயப்பரப்புகளைத் தம் கருப்பொருட்களாகக் கொண்டிருக்கின்றன. அந்தவகையில் இலங்கை சார்ந்த போலிச்செய்திகளை அடையாளம் காணும் முன்னெடுப்பினை இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மேற்கொண்டுள்ளது. இலங்கை சார்ந்த விடயப்பரப்புகளைத் தம் கருவாகக் கொண்டனவும் இலங்கையைச் சேர்ந்த சமூகவலைத்தளப் பாவனையாளர்களால் அதிகளவில் பகிரப்பட்டனவுமானவை சமகாலப் போலிச்செய்திகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

"Fact Seeker" எனும் பெயரிலான செயற்றிட்டமூடாக இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தினால், 01.02.2021 ஆம் திகதியிலிருந்து 13.10.2021 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட 151 செய்திகளை பிரதான ஆதாரமாகக் கொண்டு சமூக வலைத்தளங்களில் பரவுகின்ற சமகால போலிச்செய்திகளை ஆராய்வதை இக்கற்கை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. தரவுகளைத் திரட்டியும் பகுத்தும் நோக்குவதற்கு பகுப்பாய்வு முறையியலும் விபரிப்புச் செயற்பாட்டிற்கு விபரண ஆய்வு முறையியலும் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கை சார்ந்த போலிச்செய்திகளது இயல்புகள், விடயப்பரப்புகள், பின்னணி, போக்கு ஆகியவை எவை என்ற ஆய்வுப் பிரச்சினையை முன்வைத்து, இதுதொடர்பில் ஏற்பட்டுள்ள ஆய்விடைவெளியை நிரப்பும் நோக்குடன் இக்கற்கை முன்னெடுக்கப்படுகின்றது.

## 2. போலிச்செய்திகளின் விடயப்பரப்புகள்

### 2.1 அரசியல்

சமூகவலைத்தளச் சூழலில் அதிகளவான போலிச் செய்திகளின் விடயப்பரப்பு அரசியலாகவே அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. அரசியல் சார்ந்த போலிச்செய்திகள் சமூகவலைத் தளங்களில் பல்வகையான தன்மைகளைக் கொண்டிருக்கின்றன. நடைபெற்ற நிகழ்வொன்றின் டிஜிட்டல் சுவரொட்டியினைத் திரிபுபடுத்தி நடைபெறாத நிகழ்வொன்றை நடைபெற்றதாகக் காண்பித்தல் எனும் செயற்பாட்டின் மூலம் நிகழ்வில் பங்கேற்கும் முக்கியஸ்தரின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தல் மற்றும் அந்த நற்பெயரை தனிப்பட்ட அரசியல் இலக்குகளுக்குப் பயன்படுத்தல் போன்ற செயல்கள் இடம்பெறுகின்றன.

**உதாரணம் 1:**

**போலிச் செய்தி:**

உள்ளாடைகளுக்கு விதிக்கப்படும் இறக்குமதி கட்டுப்பாடுகள் பற்றிய கேலிக்குரிய தலைப்புடன், ஒரு நிகழ்ச்சித்

திட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க ஏற்பாடு செய்தாக ஒரு விளம்பரம் ஃபேஸ்புக் பக்கத்தில் செப்டம்பர் 11ஆம் திகதியன்று வெளியிடப்பட்டுள்ளது.

**சரியான தகவல்:**

இந்தப் பதிவின் உண்மைத்தன்மை குறித்த ஆய்வில் "ஆப்கானிஸ்தானில் என்ன நடக்கிறது?" என்ற வாசகத்துடன் பிமல் ரத்நாயக்கவின் அதிகாரபூர்வ முகநூல் பக்கத்தில் உள்ள அசல் பதிவே இவ்வாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. உண்மையான படங்களில் காணப்படுவோரை வேண்டுமென்றே, அரசியல் தலைவர்களின் குடும்ப உறுப்பினர் என அடையாளம் காட்டி நன்மதிப்புக் குறைக்கும் செயற்பாட்டில் ஈடுபடல்.

**உதாரணம் 2:**

**போலிச் செய்தி:**

"இந்த நபர் எண்ணெய்க்காக செய்யும் முட்டாள்தனத்தால், இறுதியில் அவரது மனைவியைக் கூட முக்காடு போட வைத்துவிட்டார்" என்ற தலைப்பிடப்பட்டு, அமைச்சர் உதய கம்மன்பிலவும் அவர் அருகில் முக்காடு இட்ட பெண்ணும் மற்றும் பலரும் இணைந்து நிற்கின்ற புகைப்படம்

**சரியான தகவல்:**

எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கடந்த செப்டம்பர் மாதம் ஈரானுக்கு இராஜதந்திர விஜயத்தை மேற்கொண்டார், அப்பொழுது அவர் செப்டம்பர் 26 ஆம் திகதி GASTEC 2021 உச்சிமாநாட்டின் போது தெஹ்ரான் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் எரிவாயு நிலைய அருங்காட்சியகத்தை பார்வையிட்டார். இந்த நிகழ்வின் போது எடுக்கப்பட்ட புகைப்படமே இதுவாகும். அந்த புகைப்படத்தில் இருப்பது அமைச்சின் செயலாளர், திருமதி மு.னு.சு ஓல்கா; உதய கம்மன்பிலவின் மனைவி தினேஷ கம்மன்பில அல்ல.

இலங்கையின் உள்நாட்டு அரசியலில் அதிர்வூட்டக்கூடிய செய்தியை அதீதமாக மிகைப்படுத்தும் பாங்கு இந்த அரசியல் சார்ந்த போலிச்செய்திகளில் காணப்படுகின்றது. இதன் மூலமாக மக்கள் மத்தியில் தேவையற்ற பதற்ற நிலையையோ அல்லது கவன ஈர்ப்பையோ ஏற்படுத்துவது, அச்செய்தி ஆக்குநர்களின் நோக்கமாக உள்ளது.

**உதாரணம்:**

**போலிச்செய்தி:**

"பண்டோரா ஆவணங்களில் 35 பெயர்கள் உள்ளன. 'நிருபமா ராஜபக்ச (அவரது கணவரின் பெயரால் குறிப்பிடப்படுகிறார்), அர்ஜுன் அலோசியஸ், ரவி கருணாநாயக்க, டி.எம்.ஜெயரத்ன, சஜின் வாஸ் குணவர்த்தன, படு வெத்தசிங்க, சிறிசேன குரே, டட்லி சிறிசேன, ரொஹான் பல்லேவத்த, சமரசிங்க ஆராச்சிகே மதுஷ் லக்ஷித (மாகந்துரே மதுஷ்), கம்பள விதானலாகே சமன் குமார வெலே சுதா), பிமல் ரத்நாயக்க, கிரிஷ்மல் வர்ணசூரியா (வழக்கறிஞர்), அனோமா கமகே (தயா குழும வணிகம்), ரவூப் ஹக்கீம், ஏஎச்எம் ஃபௌஸி, விஜயகலா மகேஸ்வரன், அலி ஸாஹீர் மௌலானா, எஸ்.பி. நாவின்ன, கருணாரத்ன பரணவிதான, வேலுசாமி ராதாகிருஷ்ணன், சமதரா ரணதுங்க, ஹேமா பிரேமதாச, மலிக் சமரவிக்ரம, சுஜாதா சேனாரத்ன, கவன் பெரேரா, ரொஹான் பெரேரா, மாவை சேனாதிராஜா, எஸ். யோகேஸ்வரன், அஜிதர தேவசுந்தர, ஆர். ராஜமகேந்திரன் மற்றும் ஜெய ஸ்ரீ ரங்கா.'

**சரியான தகவல்:**

"சமீபத்திய பண்டோரா ஆவணங்களில் இதுவரை வெளிவந்த இலங்கையரின் பெயர் இலங்கையின் முன்னாள் பிரதி அமைச்சர்

*நிருபமா ராஜபக்ச மற்றும் அவரது கணவர், தொழிலதிபரான திருக்குமார் நடேசன் ஆகியோர் மட்டுமே.''*

*சர்வதேச அரசியல் சார்ந்த புகைப்படமொன்றை அப்படம் சார்ந்திருக்கும் விடயத்திற்கு முற்றிலும் வேறானதும் வேறோர் ஆண்டு சார்ந்ததுமான விடயத்துக்குப் பொருந்துமாறு தகவலைத் திரித்து வெளியிடப்படும் செயல் சமூகவலைத்தளங்களில் பரவலாக இடம்பெறுகின்றது.*

**உதாரணம்:**

**போலிச் செய்தி:**

*''மெக்ஸிகோ நாடாளுமன்றத்தில் நடந்த ஒரு விவாதத்தின் போது, அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது ஆடைக ளை கழற்றி, முழு சபையையும் பின்வருமாறு விளித்தார;, ''இந்த உன்னதமான பாராளுமன்றத்தில் நான் நிர்வாணமாக இருப்பதைக் கண்டு நீங்கள் அனைவரும் வெட்கப்படுவீர்கள். ஆனால் இந்நாட்டு மக்கள் நிர்வாணமாக, வெறுங்காலுடன், வேலையில்லாமல், தெருக்களில் பட்டினி கிடப்பதைப் பார்த்து அவர்களின் பணத்தையும் வசதிகளையும் திருட நீங்கள் வெட்கப்படவில்லை.'' ''*

**சரியான தகவல்:**

*மெக்சிகோ அரசியல்வாதி ஒருவர் வெளிநாட்டு முதலீட்டிற்காக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள எண்ணெய் துறையை அறிமுகப்படுத்தும் ஒரு சர்ச்சைக்குரிய சட்டத்தை எதிர்த்து காங்கிரஸை விட்டு வெளியேறினார். மேலும், அவர் (அன்டோனியோ கார்சியா) தனது ஆடையைக் கழற்றி சட்டத்தின் மீதான தனது கடுமையான எதிர்ப்பைக் காட்டினார்.*

**2.2 சமூகம்**

*சமூகத்தில் அதிர்வை ஊட்டக்கூடியவையாகவும் தவறான பிரசாரத்தை முன்னெடுப்பவையாகவும் சமூகம் சார் போலிச்செய்திகள் காணப்படுகின்றன. இவை மக்களைத் தவறாக வழிநடத்தக் கூடியவையாகவும் குறித்த ஒரு செயல் அல்லது சம்பவம் பற்றி தவறான பிம்பத்தை ஏற்படுத்தக் கூடியவையாகவும் உள்ளன. இவ்வகையான போலிச்செய்திகள் ஆனவை, தனிநபர்கள் அல்லது குறிப்பிட்டதொரு குழு அல்லது சமூகத்தின் மீது தேவையற்ற கவனக்குவிப்பையும் ஏற்படுத்த வல்லவையாக உள்ளன.*

*ஓர்உயிரிழப்புசார்செய்திக்கானபடத்தைக் கொண்டு, இடம்பெறாத உயிரிழப்பு ஒன்றைச் சித்தரிக்கும் வகையிலான போலிச் செய்திகள், காலத்துக்குக் காலம் உருவாக்கப்பட்டு சமூகவலைத்தளங்களில் பரப்பப்படுகின்றன.*

**உதாரணம்:**

**போலிச் செய்தி:**

*''உலகம் முழுவதையும் இசையால் பைத்தியமாக்கிய BTS குழு விமான விபத்தில் பலியானது'' என்ற தலைப்பிட்டு பரவும் புகைப்படம்*

**சரியான தகவல்:**

*புகைப்படத்தில் காணப்படும் விபத்துக்குள்ளான விமானம் ஒரு தனியார் ஜெட் விமானம் என்பது தெரியவந்தது. குறிப்பிட்ட விமானம் 22 மே 2018 அன்று மத்தியஅமெரிக்காவில்விபத்துக்குள்ளானது. இந்தவிபத்தில்ஊழியர்கள்மற்றும்பயணிகள் அனைவரும் உயிர் தப்பினர். அதேவேளை, ஏழு உறுப்பினர்களைக் கொண்ட BTS இசைக்குழு மிகவும் பிரபலமான கொரிய*

பாப் இசைக்குழு ஆகும். மேலும், அவர்கள் விமான விபத்தை எதிர்கொண்டதாக எந்த தகவலும் இல்லை என்பது தொழில்நுட்ப விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டது.

அறவே தொடர்பற்ற புகைப்படம் மூலம் உட்கட்டமைப்பு வசதியை விமர்சிக்கும் வகையிலமையும் தகவலைப் பரப்பும் செயலை கணிசமான போலிச்செய்திகள் சமூகவலைத்தளங்களில் புரிகின்றன.

**உதாரணம்:**

**போலிச் செய்தி:**

"ஒரு நடைபாதை, இதில் நீங்கள் ஒரு படி தவறினால் என்ன செய்வது?" என்ற தலைப்புடன் இலங்கையில் அமைந்துள்ள தொங்கு பாலம் எனப் பரவும் ஒரு புகைப்படம்

**சரியான தகவல்:**

இந்த புகைப்படத்தின் உண்மைத் தன்மையை அறிவதற்காக மேற்கொண்ட தொழில்நுட்ப ஆய்வில் இது இந்தோனேசியாவின் பான்டன் பிரதேசத்தில் உள்ள பாலம் என்பது தெரியவந்தது. நியூயோர்க் டெய்லி நியூஸ் இணையத்தளத்தில் 2012 ஜனவரி 20 ஆம் திகதியன்று இந்த புகைப்படத்துடன் பின்வருமாறு ஒரு செய்தி வெளியிடப்பட்டது. "இந்தோனேசியாவின் பான்டனில் ஒரு ஆற்றின் மறுபுறத்தில் உள்ள பள்ளியை அடைய மாணவர்கள் சேதமடைந்த தொங்கு பாலத்தை கடந்து செல்லும் புகைப்படம்" என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தம் தொடர்பில் மக்களைப் பதற்றமடையச் செய்யும் வகையிலான பொய்த்தரவுகள் அல்லது அதீதமாக மிகைப்படுத்தப்பட்ட உண்மைத்தரவுகளைக் காவும் போலிச்செய்திகள் பொதுமக்களின் உணர்வுநிலையைச் சீர்குலைக்க வல்லவையாக உள்ளன.

**உதாரணம்:**

**போலிச் செய்தி:**

"ராவணன் நீர்வீழ்ச்சி திடீரென கடுமையாக பெருக்கெடுத்தது" என்ற தலைப்பில் தொடர்ச்சியான புகைப்படங்கள் கோசிப் லங்கா நியூஸ் இணையதளத்தில் 1 அக்டோபர் 2021 அன்று வெளியிடப்பட்டன. "பெய்த மழையால், இதுவரை அமைதியாக இருந்த நீர்வீழ்ச்சிகள் மீண்டும் செயல்படுகின்றன. இந்த புகைப்படங்கள் ராவணன் நீர்வீழ்ச்சியின் விளைவைக் காட்டுகின்றன."

**சரியான தகவல்:**

இந்த செய்தி குறித்து மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப ஆய்வின்படி, புகைப்படங்கள் பிரசன்ன பத்மசிறி என்பவரால் 2020 இல் எடுக்கப்பட்டது என்பது தெரியவந்தது. டெய்லி மிரர் வலைத்தளம் நவம்பர் 6, 2020 அன்று "ராவணன் நீர்வீழ்ச்சியின் நிறம் மாறிவிட்டது" என்ற தலைப்பில் இந்தப் புகைப்படங்களைப் பயன்படுத்தி ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது.

### 2.3 ஆரோக்கியம்

இக்கற்கையின் பிரதான தரவுகள் அனைத்தும் கொரோனா பெருந்தொற்று இலங்கையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்திய காலப்பகுதியில் உருவாகியுள்ள நிலையில், அவற்றில் கணிசமானவை, ஆரோக்கியம் சார்ந்த விடயப்பரப்பினை மையப்படுத்தியுள்ளன. தொற்றுநோய் தொடர்பான பொதுமக்களின் பயத்தினை தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்ளும் போக்கினை, இவ்விடயப்பரப்பு சார்ந்த போலிச்செய்திகள் ஊடாகக் காண முடிகின்றது.

கொரோனா பெருந்தொற்றைக் குணமாக்கும் புதிய வழிகள் எனக்கூறி, பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்த போலிச்செய்திகள் பாரியளவில் சமூகவலைத்தளங்களில் பரப்பப்பட்டன.

**உதாரணம் 1:**

**போலிச் செய்தி:**

"இந்த மருந்தை எடுத்துக்கொள்ளுங்கள், கொரோனா முடிந்துவிட்டது, அமெரிக்காவிலிருந்து ஒரு சிறந்த மாத்திரை. மருத்துவ பரிசோதனைகள் முடிந்துவிட்டன" என்ற தலைப்புடன் லங்கா சி நியூஸ் இணையதளம் அக்டோபர் 4, 2021 அன்று செய்தி வெளியிட்டது. " 'மெர்க்-Merck எனும் அமெரிக்க நிறுவனம் தயாரித்த 'மோல்னுபிரவீர்-Molnupiravir' எனும் மருந்து மிகவும் வெற்றிகரமான முடிவுகளைக் காட்டுகிறது." என அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

**சரியான தகவல்:**

யுஎன்சி (UNC -UNC School of Medicine) மற்றும் விஞ்ஞானிகள் மோல்னுபிரவீர் கோவிட் -19 க்கு சிகிச்சையளிக்கும் போக்கை மாற்றக்கூடிய ஒரு சிறிய மாத்திரை என்று முடிவு செய்தனர். மேலும், வைத்தியர் கேமரூன்வோல்ப் "இது செயலில் உள்ள வைரஸ் தடுப்புக்கான ஒரு பிறபொருளெதிரி" என்று விளக்குகிறார். எனவே, மோல்னுபிரவீர் தொடர்பாக நிறைய வெளிநாட்டுச் செய்திகள் இருந்தாலும், அது இன்னும் அதிகாரபூர்வமாக பயன்படுத்த அங்கீகரிக்கப்படவில்லை.

**உதாரணம் 2:**

**போலிச் செய்தி:**

"இலங்கையில் தயாரிக்கப்பட்ட விரைவான ஆன்டிஜென் சோதனை கருவியின் விலை 80 ருபாய். குறைந்தபட்ச எண்ணிக்கையாக - 5 கருவிகளை கொள்வனவு செய்ய முடியும். நாடு முழுவதும் விநியோகத்திற்கான மொத்த கட்டணம் 100 ரூபாவாகும். 500 ரூபாவுக்கு 5 கருவிகளை உங்கள் இல்லங்களுக்கே வரவழைத்துக் கொள்ளுங்கள்." மேற்கண்ட விவரங்களுடன் ஒரு பதிவு சமூக ஊடகங்களில் பகிரப்படுகிறது. இது "ப்ரிமா" என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்படுவதாகக் கூறப்படுவதோடு, மௌபிம லங்கா அறக்கட்டளையின் "Buy Our Things" என்ற முத்திரையையும் கொண்டுள்ளது.

**சரியான தகவல்:**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள "ப்ரிமா" நிறுவனம் குறித்த ஆய்வில் அது சுவிட்சர்லாந்தில் அமைந்துள்ள ஒரு நிறுவனம் என்பது தெரியவந்தது. இந்நிறுவனத்தின் வலைத்தள பக்கத்திலுள்ள தயாரிப்பின் புகைப்படமானது தற்போது புழக்கத்திலுள்ள செய்தியிலிருக்கும் புகைப்படத்தை ஒத்திருந்தபோதிலும், அதில் "Buy Our Things" என்ற முத்திரை காணப்படவில்லை. புகைப்படம் குறித்த தொழில்நுட்ப ஆய்வில், "ப்ரிமா" வலைத்தளத்திலிருந்த அசல் புகைப்படத்தில் "Buy Our Things" என்ற முத்திரையை செருகி மாற்றியமைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. விரைவான ஆன்டிஜென் சோதனை கருவியை வீட்டிற்கே பெற்றுக்கொள்ள முடியும் எனவும் புழக்கத்திலுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் "ப்ரிமா" நிறுவனத்தின் வலைத்தளத்தின் தகவல்களின்படி, இத்தயாரிப்பு சுகாதார ஊழியர்களுக்கு மட்டுமே பரிந்துரைக்கப்படுகிறது. "ப்ரிமா" நிறுவனத்தின் வலைத்தளம் தொழில்முறை தயாரிப்புகள் சுகாதார ஊழியர்களுக்கு பரிந்துரைக்கப்படுவதாகவும், அதன் சுய சோதனை பொருட்கள் "ப்ரிமா

ஹோம் டெஸ்ட்" பிரிவின் கீழ் விற்பனை செய்யப்படுவதாகவும் குறிப்பிடுகிறது. பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள விரைவான ஆன்டிஜென் சோதனை கருவியானது தொழில்முறை தயாரிப்புகள் பிரிவின் கீழ் விற்பனை செய்யப்படுகிறது. இந்த விரைவான ஆன்டிஜென் சோதனை கருவி உள்நாட்டில் தயாரிக்கப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த மௌபிம லங்கா அறக்கட்டளையின் நிர்வாக பணிப்பாளரைத் தொடர்புகொண்டபோது, தனது அறக்கட்டளைக்கு அத்தகைய தயாரிப்புடன் எந்த தொடர்பும் இல்லையென்றும் அது ஒரு போலிப் பதிவு என்றும் கூறினார்.

### 2.4 வர்த்தகம்

இக்கற்கையின் பிரதான தரவுகள் உருவாகிய காலப்பகுதியில் கொரோன பெருந்தொற்று காரணமாகவும் மேலும் பல்வேறு அரசியல் - பொருளாதாரக் காரணிகளாலும் இலங்கையின் பொருளாதார நிலை பாரிய சரிவுக்கு உள்ளாகியது. இக்காலத்தில் ஏற்பட்ட வாழ்க்கைச்செலவு அதிகரிப்பினால் சமூகத்தின் நடுத்தர வர்க்கம் மற்றும் கீழ் வர்க்கம் ஆகியவை கடுமையான பாதிப்புக்கு உள்ளாகின. பொதுமக்களின் இந்த நிர்க்கதியான நிலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தும் பாங்கினை சில போலிச்செய்திகளின் நடத்தையில் காணமுடிகின்றது.

நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு பரிசுகளை அளிப்பதாகப் பரப்பப்படும் போலிச்செய்திகள் பொதுமக்களின் ஆர்வத்தைக் கவர்ந்திழுப்பதுடன், ஏமாற்றப்பட்டமை தெரிந்தவுடன் அந்நிறுவனங்கள் மீது மக்களின் வெறுப்புணர்வு பாயும் வண்ணம் செயற்படுகின்றன.

**உதாரணம் 1:**

**போலிச் செய்தி:**

மக்கள் வங்கியின் 60 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் 30,000ரூபாய் ரொக்கப்பரிசைவெல்லமுடியும் என்று ஒரு செய்தி சமூக ஊடகங்களில் பரவி வருகிறது. செய்தியில் உள்ள இணைப்பு சிங்களம் மற்றும் தமிழில் பதிலளிக்கும் வகையிலான நான்கு கேள்விகளைக் கொண்ட ஒரு திரைக்கு வழிநடத்துகிறது. பின்னர் 9 பரிசுப் பெட்டிகளைக் கொண்ட ஒரு திரைக்கு வழிநடத்துகிறது. "சரியான பரிசுப் பெட்டியை" தேர்ந்தெடுத்தவுடன், பயனர்கள் அந்த செய்தியை வாட்ஸ்அப் அல்லது மெசஞ்சர் வழியாக 5 குழுக்களுடன் அல்லது 20 நபர்கள் வரை பகிர்ந்து, தனிப்பட்ட விவரங்களை உள்ளிட்டு பதிவை முடிக்கும்படி கோரப்படுவர்.

**சரியான தகவல்:**

இவ்வாறானதொரு பரிசு நிகழ்வு மக்கள் வங்கியால் ஏற்பாடு செய்யப்படவில்லை. "மக்கள் வங்கி எவ்வித போட்டிகளையோ அல்லது சீட்டிழுப்புகளையோ நடத்தாது எனவும், இதுபோன்ற மோசடி நடவடிக்கைகளால் ஏமாறக்கூடாது என்பதை எமது விசுவாசமான வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்!" எனவும் மக்கள் வங்கி அறிவிப்பொன்றை வெளியிட்டது. மேலும், சமூகவலைத்தளத்தில் பகிரப்பட்ட அச் செய்தியில் பரிசுகளைப் பெற்றதாக பல வெளிநாட்டவர்கள் பதிவிட்டிருந்த போதிலும், அது குறித்து இலங்கையர்கள் யாரும் கருத்து தெரிவிக்கவில்லை என்பது கண்டறியப்பட்டது.

**உதாரணம் 2:**

**போலிச் செய்தி:**

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல். சி. உடன் இணைந்த "கீல்ஸ்" பல்பொருள்

அங்காடியானது அதன் 40 வது ஆண்டு நிறைவையொட்டி இடம்பெறவுள்ள விழாவில் 20,000 ரூபாய் பெறுமதியான பரிசுக் கூப்பனை வழங்கவுள்ளதாக வாட்ஸ்அப் மூலம் பரவும் ஒரு போலிச் செய்தி.

**சரியான தகவல்:**

இந்த செய்தி தொடர்பாக, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சியை தொடர்பு கொண்டபோது, சம்பந்தப்பட்ட இணைப்பு தங்கள் வலைத்தளத்துடன் தொடர்பான அதிகாரபூர்வ இணைப்பு அல்ல என்று அதிகாரிகள் கூறினர். மேலும், இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு (SLCERT) இந்த சம்பவம் குறித்து பின்வருமாறு கருத்து தெரிவித்தது; "இந்த மோசடிகளில் பெரும்பாலானவை இத்தகைய பொது நிறுவனங்களின் போர்வையில், நிறுவனத்தின் தினசரி வாடிக்கையாளர்களை இலக்காகக் கொண்டு மோசடியான முறையில் தனிப்பட்ட தரவுகளைச் சேகரிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன."

**3. பகுப்பாய்வு**

அரசியல் சார் போலிச்செய்திகள் பெருமளவில் அரசியல்வாதிகள் அல்லது அரசியல் முக்கியத்துவம் உடையோரையே பெரிதும் குறிவைக்கின்றன. அவர்களுடைய அரசியல் பலம் மற்றும் சமூக அந்தஸ்து ஆகியவற்றின் மீதான வெகுசன நல்லெண்ணத்தை அகற்றல் அல்லது குறைத்தல் ஆகியவற்றை அப்போலிச்செய்திகள் தம் நோக்கமாக வைத்திருக்கின்றன. மேலும், ஓர் அரசியல்வாதியின் செயற்பாடு குறித்து மக்கள் மத்தியில் ஏற்பட்ட பிம்பத்தை நீர்த்துப்போகச் செய்தல், திசைமாற்றல் அல்லது அப்பிம்பத்தை உருக்குலைத்தல் ஆகியவையும் அரசியல் சார் போலிச்செய்திகளின் நோக்கங்களாக உள்ளன. அரசியல் சார் போலிச்செய்திகளை ஆக்கும் நபர்கள் தமது சொந்த அரசியல் கருத்துநிலைகளுக்கு ஏற்ற வண்ணம், அரசியல் முக்கியஸ்தர்களின் கூற்றுக்களைத் திரிபுபடுத்துவதையும், அம்முக்கியஸ்தர்களின் வைபவப் பங்கேற்பு குறித்த பொருத்தமில்லாத தகவல்களை வழங்குவதையும் காணக்கூடியதாக உள்ளது. மேலும், இவ்வாறான போலிச்செய்தி ஆக்குநர்கள் தத்தம் அரசியல் எதிரிகள் மீது ஏவும் ஆயுதமாகவும் அரசியல் சார் போலிச்செய்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

சமூகம் சார் போலிச்செய்திகள் உருவாக்குபவர்கள் சமூகத்தில் ஓர் அதிர்வினை ஏற்படுத்த விரும்புகின்றார்கள். அது சமூக ஊடகத்தளத்தில் ஏற்படுத்தும் அதிர்வின் அளவு செய்தியின் விடயத்தைப் பொறுத்து மாறுபடுகின்றது. இவ்வகையான போலிச்செய்திகள் பலவற்றின் உருவாக்கத்தின் பின்னால் இலக்குகள் இருந்தாலும், சில வேளைகளில் எவ்வித இலக்குகளும் இன்றி வேடிக்கைக்காகவும் கூட இவை உருவாக்கப்படுகின்றன. இவற்றினை ஆக்குபவர்களின் இலக்கு சார் நோக்கம் மற்றும் அதன் உளவியல் குறித்து விரிவான ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியமாகின்றது.

கொரோனா பெருந்தொற்று காலத்தில், ஆரோக்கியத்தினை தமது விடயப்பரப்பாகக் கொண்டு ஏராளமான போலிச்செய்திகள் பரவின. இதுவரை கொரோனா போன்ற பெருந்தொற்று ஒன்றை எதிர்கொண்டிராததும் அதற்குத் தயார்நிலையில் இல்லாததுமான இலங்கையின் சமூகத்தில், இவை பாரிய அதிர்வினை ஏற்படுத்தின. சமூக வலைத் தளங்களைப் பயன்படுத்துவோரிலிருந்து,